**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.800/2024 நாள்- 18.07.2025

**வா.சா.2- மகாலிங்கம்**

**வா.சா.2-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் முலம் வருடத்திற் கு ரூ.50,000/- வருமானம்பார்த்து வருகிறேன். இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதி யை எனக்கு தெரியும். எவ்வாறு தெரியும் என்றுகேட்டால் ஒரே ஊர் என்பதால் பழக்க வழக்கம் உண்டு. வாதி, பிரதிவாதிக்கு ரூ.2,50,000/- தை ரூ.500/- தாள்களாக கொடுத்தார். இதற்கு முன்பாக வாதி, பிரதிவாதிக்கு இடையே கொடுக்கல், வாங்கல் விவரம் பற்றி எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதிக்கு புரோநோட்டை சேத்துார் கருப்பையா பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார் அந்த புரோநோட்டில் நான் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். இதற்கு முன்பாக நான் வேறு வழக்கிற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன்.எனக்கு இந்த வழக்கு பற்றி விவரம் தெரியாது வாதி சொல்லி தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி கூறி வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ச ரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.